**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -15 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

**1)** கலிங்கத்துப்பரணியானது, ___ மற்றும் அவருடைய படைத்தலைவன் ___ ஆகியோர் பற்றிப் பாடப்பட்டது

A) முதலாம் குலோத்துங்கச்சோழன், விஜயரகுநாத சேதுபதி

B) முதலாம் குலோத்துங்கச்சோழன், கருணாகரத்தொண்டைமான்

C) மூன்றாம் குலோத்துங்கச்சோழன், விஜயரகுநாத சேதுபதி

D) மூன்றாம் குலோத்துங்கச்சோழன், கருணாகரத்தொண்டைமான்

**2)** திருமூலர் பற்றிய வாக்கியங்களில் தவறானது எது?

A) பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர்

B) பதினெண் சித்தர்களுள் ஒருவர்

C) இவரின் பாடல்கள் 10ம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது

D) இவர் மூவாயிரம் பாடல்களை இயற்றியுள்ளார்

**3)** பராபரம் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) யாதுமான கடவுள் B) மேலான பொருள் C) இன்பப்பெருக்கு D) இயற்கை

**4)** பெருநீரால் வாரி சிறக்க! இருநிலத்து / இட்ட வித்து எஞ்சாமை நாறுக! - என்று துவங்கும் தகடூர் யாத்திரை பாடல் எந்த மன்னரின் நாட்டில் வளம் பெருக வேண்டி வாழ்த்திப் பாடப்பட்டது ஆகும்?

A) சேர மன்னர் B) சோழ மன்னர்

C) பாண்டிய மண்னர் D) பல்லவ மன்னர்

**5)** அதியமானுக்காக ஒளவையார் யாரிடத்தில் தூதாகச் சென்றார், அவனை எங்கு சந்தித்தார்?

A) நெடுஞ்செழியன், மதுரை B) தொண்டைமான், காஞ்சி

C) இளந்திரையன், வஞ்சி D) பெருவளத்தான், உறையூர்

**6)** சரியான வாக்கியம் எது?

A) மாணவன் தமது கையால் பெற்றுக் கொண்டான்

B) தலைவர் தனது கையால் பரிசு வழங்கினார்

C) இவை தாம் எனக்குப் பிடித்த நூல்கள்

D) குழந்தைகள் தன்னால் இயன்ற உதவிகளைப் பிறருக்கு செய்கின்றனர்

**7)** அயோத்திதாசரால் ஒரு பைசா தமிழன் என்ற வார இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு மற்றும் அப்போது அதன் விலை?

A) 1908, காலணா

B) 1907, காலணா

C) 1908, அரையணா

D) 1907, அரையணா

ETW ACADEMY

8) மரபுத் தொடர்களில் பொருந்தாதது?

A) கொடிகட்டிப் பறத்தல் - புகழ்பெற்று விளங்குதல்
B) அவசரக்குடுக்கை - எண்ணிச் செயல்படாமை
C) கல்லில் நார் உரித்தல் - ஆராய்ந்து பாராமல்
D) பொருந்தாதது ஏதுமில்லை

9) எதிர்மறைச் சொற்களில் பொருந்தாதது எது?

A) தன்மை ஒருமை - நான் அல்ல
B) முன்னிலை ஒருமை - நீ அல்லை
C) படர்க்கை ஆண்பால் - அவன் அல்லன்
D) படர்க்கை ஒன்றன்பால் - அஃது அன்று

10) சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக பாடப்பட்ட திருவெம்பாவை என்ற நூலை இயற்றியவர் யார்?

A) அப்பர்
B) சுந்தரர்
C) ஞானசம்பந்தர்
D) மாணிக்கவாசகர்

11) அம்பேத்கருடன் பொருந்தாதது எது?

A) விடுதலை இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்
B) இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை
C) அரசியலமைப்பு வரைவுக்குழுவின் தலைவர்
D) அரசியல் நிர்ணயசபையின் தலைவர்

12) வறுமை வந்த காலத்தில் எது குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும் என திருவள்ளுவர் கூறுகிறார்?

A) தயக்கம் குறையாமல்
B) இரக்கம் குறையாமல்
C) ஆக்கம் குறையாமல்
D) ஊக்கம் குறையாமல்

13) மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலை தொகுத்தவர் யார்?

A) கோமகள்
B) இறையரசன்
C) சீரங்கராயன் சிவக்குமார்
D) அ. வெண்ணிலா

14) இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் ___________ அணி.

A) பிறிதுமொழிதல்
B) வேற்றுமை
C) உவமை
D) சிலேடை

15) திண்டுக்கல் மாவட்டத்தில், சுங்குடி சேலைகளுக்கு புகழ்பெற்ற ஊர் எது?

A) சின்னாளப்பட்டி
B) வத்தலகுண்டு
C) காந்தி கிராமம்
D) நிலக்கோட்டையூர்

16) பின்வரும் குறள்களில் பிறிது மொழிதல் அணி பயின்று வரும் குறள் எது?

A) கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும் / நாவாயும் ஓடா நிலத்து
B) தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே / நாவினால் சுட்ட வடு
C) வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்
D) மேற்கண்ட அனைத்தும்

**17)** பின்வரும் வாக்கியங்களில் எவை சரி?

1. 'பரணிக்கோர் செயங்கொண்டார்' என்று புகழ்ந்தவர் பலபட்டைச் சொக்கநாதப்புலவர்

2. தென்தமிழ் தெய்வப்பரணி என்றவர் ஒட்டக்கூத்தர்

3. எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப் பரணியே என்றவர் ம.பொ.சிவஞானம்

A) 1, 2 & 3 B) 2 & 3 C) 1 & 2 D) 1 & 3

**18)** பின்வருவனவற்றுள் வல்லினம் மிகா தொடரைத் தேர்ந்தெடுக்க.

A) உவமைத்தொகை B) பெயரெச்சம்

C) உருவகம் D) திசைப்பெயர்கள்

**19)** பொருந்தா இணை எது?

A) கொல்லிப்பாவை - இராஜமார்த்தாண்டன் B) கனவு - சுப்ரபாரதி மணியன்

C) எழுத்து - சி.சு.செல்லப்பா D) அன்னம் விடு தூது - மு.மேத்தா

**20)** இந்திய அரசு எம்.ஜி.ஆருக்கு பாரத ரத்னா விருது வழங்கிய ஆண்டு?

A) 1996 B) 1990 C) 1988 D) 1987

**21)** அவ்வைக்கு அதியமானால் கொடுக்கப்பட்ட நெல்லிக்கனியை மரத்திலேறி பறித்தவர் யார்?

A) அதியமான் B) அதியமானின் மகன் பொகுட்டெழினி

C) அதியமானின் தளபதி D) அதியமானின் அமைச்சர்

**22)** பொருந்தாதது எது?

A) வேளாண் வேதம் - நாலடியார் B) தமிழ் மூவாயிரம் - திருவாசகம்

C) தமிழ் வேதம் - நாலாயிர திவ்விய பிரபந்தம் D) தமிழர் வேதம் - திருமந்திரம்

**23)** குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் இயற்பெயர் என்ன?

A) செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் B) சுல்தான் அப்துல் காதர்

C) அபுல்காசிம் D) மேற்கண்ட எதுவுமில்லை

**24)** அயோத்திதாசர் பதிப்பித்த நூல்களில் சேராதது எது?

A) போகர் எழுநூறு B) அகத்தியர் இருநூறு

C) சிமிட்டு இரத்தினச் சுருக்கம் D) இலக்கண விளக்கம்

**25)** இந்த உலகம் இன்னும் இயங்குவதற்கான காரணமாக திருவள்ளுவர் கூறுவது எதை?

A) பண்புடைய சான்றோர் வழியில் நடப்பதால் B) பண்புடைய பத்தினிகள் இருப்பதால்

C) பண்புடைய வேந்தர்கள் ஆள்வதால் D) பண்புடைய நண்பர்களால்

**26)** திருவள்ளுவர், அவ்வையார் ஆகியோரின் படைப்புகளுக்கு _____ கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை அயோத்திதாசர் எழுதியுள்ளார்.

A) இந்து B) சமண C) பௌத்த D) ஆசீவக

ETW ACADEMY

**27)** ஆண்டாள் எழுதிய திருப்பாவையைத் தழுவி இயற்றப்பட்ட கன்னிப்பாவை என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) சீரங்கராயன் சிவக்குமார் B) அ. வெண்ணிலா C) இறையரசன் D) கோமகள்

**28)** கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் மு.மேத்தாவின் படைப்புகள் அல்லாதவை எவை?

A) ஊர்வலம் & கண்ணீர் பூக்கள்

B) சோழ நிலா & அவர்கள் வருகிறார்கள்

C) மகுட நிலா & நடந்த நாடகங்கள்

D) இது எங்கள் கிழக்கு & புதியதொரு விதி செய்வோம்

**29)** அச்சில் வந்த அம்பேத்கரின் முதல் நூல்?

A) பண்டைய கால இந்திய வணிகம்

B) இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

C) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்

D) ரூபாயின் சிக்கல்கள்

**30)** பின்வருவனவற்றுள் திருப்பூர் பகுதியின் சிறப்புகளில் சேராதது?

A) இன்று திருப்பூர் மிகச்சிறந்த பின்னலாடை நகரமாக விளங்குகிறது.

B) இந்தியாவின் முதல் ஆயத்த ஆடைப் பூங்காவான நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

C) தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

D) பூட்டு தொழிற்சாலை நிறைந்த மாவட்டம் இது

**31)** தகடூர் யாத்திரையின் சில பாடல்கள் பின்வரும் எந்த தொகுப்பு நூலில் கிடைக்கின்றன?

A) புறத்திரட்டு B) தனிப்பாடல் திரட்டு C) பட்டினத்தார் பாடல்கள் D) A & B

**32)** கலிங்கத்துப்பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது; கலிங்கத்துப் பரணி எத்தனை தாழிசைகளைக் கொண்டது?

A) 588 B) 500 C) 599 D) 699

**33)** எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி (2017-18), எந்தெந்த ஊர்களின் பேருந்து நிலையங்களுக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது?

A) நெல்லை & மதுரை B) கோவை & நெல்லை

C) சென்னை & மதுரை D) சென்னை & கோவை

**34)** பின்வரும் வாக்கியங்களில் எவை சரி?

1. இகரத்தில் முடியும் வினையெச்சங்கள் குற்றியலிகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும்.

2. உகரத்தில் முடியும் எல்லா வினையச்சங்களை அடுத்தும் வல்லினம் மிகும்.

A) 1 மட்டும் B) 2 மட்டும்

C) 1 & 2 D) ஏதுமில்லை

ETW ACADEMY

**35)** எண்ணுப்பெயர்களில் .............. & .............. ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும்.

A) ஒன்று, இரண்டு B) ஒன்பது, ஆறு C) எட்டு, பத்து D) ஐந்து, ஏழு

**36)** பொருத்துக:

1. அழுக்காறு - அ) சோர்வு
2. பொறை - ஆ) பொறாமை
3. மதம் - இ) பொறுமை
4. பொச்சாப்பு - ஈ) கொள்கை
5. இகல் - உ) பகை

A) 1-அ, 2-ஆ, 3-இ, 4-ஈ, 5 - உ B) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4 - உ, 5-அ
C) 1-ஆ, 2-ஈ, 3-இ, 4 - உ, 5-அ D) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4 - அ, 5-உ

**37)** 1924 இல் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அம்பேத்கர் நிறுவிய அமைப்பு யாது?

A) குரலற்றவர்களின் சங்கம் B) பிராமணரல்லாதோர் நல்வாழ்வு சங்கம்
C) ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை D) மகர் நல்வாழ்வுப் பேரவை

**38)** கரூரை தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிடும் அயல்நாட்டுப் பயணி யார்?

A) தாலமி B) நூனிஸ் C) மார்கோபோலோ D) பிளிணி

**39)** "நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு, இரண்டாவது தெய்வம் சுயமரியாதை, மூன்றாவது தெய்வம் நன்னடத்தை" என்பது யாருடைய கூற்று?

A) அம்பேத்கர் B) அயோத்திதாசர் C) எம்.ஜி.ஆர் D) அப்துல்கலாம்

**40)** இந்திய அரசு மிகச்சிறந்த நடிகருக்கு வழங்கும் ___ பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கிச் சிறப்பித்தது.

A) தாமரை B) பாரத்
C) பாரத மாமணி D) தாதா சாகேப் பால்கே

**41)** குணங்குடி மஸ்தான் இயற்றாத கண்ணி நூல் யாது?

A) எக்காளக் கண்ணி B) மனோன்மணிக் கண்ணி
C) பராபரக்கண்ணி D) நந்தீசுவரக் கண்ணி

**42)** என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள் என்றவர் யார்?

A) அறிஞர் அண்ணா B) தந்தை பெரியார்
C) இரட்டைமலை சீனிவாசனார் D) பட்டுக்கோட்டை அழகிரி

**43)** கல்வியோடு _____ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

A) சிலம்பமும் B) கைத்தொழிலும்
C) கணிப்பொறியும் D) போர்த்தொழிலும்

ETW ACADEMY

**44)** வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்

A) நீலகிரி B) கரூர் C) கோயம்புத்தூர் D) திண்டுக்கல்

**45)** அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழுவில் இடம்பெறாத உறுப்பினர்கள் யாவர்?

A) கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி

B) கே.எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா

C) மாதவராவ், டி.பி. கைதான்

D) சச்சிதானந்த சின்ஹா, சரோஜினி அம்மையார்

**46)** அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1990 B) 1988 C) 1974 D) 1981

**47)** வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனை ...................... எனக் குறிப்பிடுவர்.

A) வல்லொற்று B) தோற்றப்பிழை C) சந்திப் பிழை D) மரபுப் பிழை

**48)** பொருந்தா இணை?

A) தென்னிந்திய சமூக சீர்திருத்தத்தின் தந்தை B) இந்தியாவின் விடிவெள்ளி

C) பகுத்தறிவு பகலவன் D) நவீன இந்தியாவின் விடிவெள்ளி

**49)** எத்தனை அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய்?

A) 8 B) 12 C) 16 D) 24

**50)** 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

A) அ + களத்து B) அக் + களத்து C) அக்க + அளத்து D) அம் + களத்து

**51)** எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது ........ எனப்படும், அது எத்தனை வகைபடும்?

A) தொடை, 8 B) அடி, 4 C) அசை, 2 D) தளை, 7

**52)** தமிழ்நாடு அரசின் விருது பெற்ற கோமகளின் புதினம் எது?

A) அன்பின் சிதறல் B) உயிர் அமுதாய்

C) நிலாக்கால நட்ச்சத்திரங்கள் D) அன்னை பூமி

**53)** பால்மனம் என்ற கதையை எழுதிய எழுத்தாளர் கோமகளின் இயற்பெயர்?

A) மீனாட்சி B) இராஜேஸ்வரி C) இராஜலட்சுமி D) கோமதி

**54)** இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது ................... அணி எனப்படும்

A) இரட்டுறமொழிதல் அணி B) வேற்றுமையணி

C) பிறிதுமொழிதல் D) தற்குறிப்பேற்ற அணி

ETW ACADEMY

**55)** "சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது / ஆதல் நின்னகத்து அடக்கிச் சாதல் நீங்க எமக்கீந் தனையே." - என்னும் பாடலடிகள் யாருடையவை?

A) திருமூலர் B) ஔவையார் C) செயங்கொண்டார் D) மோசிகீரனார்

**56)** "இல்லோர் ஒக்கல் தலைவன் / அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே" - என்று தொடங்கும் பாடலை இயற்றியவர்?

A) ஔவையார் B) திருமூலர்
C) செயங்கொண்டார் D) தகடூர் யாத்திரை ஆசிரியர்

**57)** பின்வரும் கூற்றுகளை கவணிக்க:

1. மழை பெய்யாமல் ஊரில் பஞ்சம் ஏற்படும் காலங்களில், சிற்றூர் மக்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று உப்பில்லாச் சோற்றை ஒரு பானையில் வாங்குவர்
2. ஊர்ப் பொது இடத்தில் வைத்து அச்சோற்றை அனைவரும் பகிர்ந்து உண்பர்.
3. கொடிய பஞ்சத்தைக் காட்டும் அடையாளமாக நிகழும் இதனைக் கண்டு வானம் மனமிரங்கி மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை

மேற்கண்ட நம்பிக்கை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) உப்புமழை நோன்பு B) மழை நோன்பு
C) மழைச்சோற்று நோன்பு D) உப்பில்லா நோன்பு

**58)** இலக்கிய சிந்தனை விருது பெற்ற சீரங்கராயன் சிவக்குமார் எந்த ஊரைச் சேர்ந்தவர்?

A) கன்னிக்கோவில் B) கன்னிவாடி C) ஏர்வாடி D) நாகர்கோயில்

**59)** சீரங்கராயன் சிவக்குமார் இயற்றாத நூல் எது?

A) கன்னிவாடி B) குணச்சித்திரங்கள்
C) உப்புக்கடலைக் குடிக்கும் பூனைகள் D) ஆழி சூழ் உலகு

**60)** பூனா ஒப்பந்தம் பின்வரும் எதனோடு தொடர்புடையது?

A) தனித்தொகுதிகள் ஒதுக்கீடு B) வட்டமேசை மாநாடுகளில் பங்கேற்பு
C) சட்டமறுப்பு இயக்கத்தை கைவிடுதல் D) இந்து மத மேலதிகாரம்

**61)** பா எத்தனை வகைபடும்?

A) 2 B) 3 C) 4 D) 5

**62)** பொருத்துக:

1. வெண்பா - அ) செப்பலோசை
2. ஆசிரியப்பா - ஆ) அகவல் ஓசை
3. கலிப்பா - இ) துள்ளல் ஓசை
4. வஞ்சிப்பா - ஈ) தூங்கலோசை

A) 1-அ, 2-ஆ, 3-இ, 4-ஈ, 5 - உ B) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4 - உ, 5-அ
C) 1-ஆ, 2-ஈ, 3-இ, 4 - உ, 5-அ D) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4 - அ, 5-உ

ETW ACADEMY

63) "மீனோடு நெற்குவைஇ / மிசையம்பியின் மனைமறுக்குந்து / ......... / கலந்தந்த பொற்பரிசம் / கழித்தோணியால் கரைசேர்க்குந்த" - என்று சேர நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி குறித்து விளக்கும் நூல்?

A) புறநானூறு B) அகநானூறு C) நற்றிணை D) குறுந்தொகை

64) 'நெல்லும் உப்பும் நேரே ஊரீர் / கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்' - என்ற அடிகள் மூலம், சேர நாட்டில் உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என விளக்கும் இலக்கியம்?

A) கலித்தொகை B) அகநானூறு C) நற்றிணை D) குறுந்தொகை

65) பொருந்தாத இணை எது?

A) வஞ்சிப்பா - அறநூல்கள்
B) ஆசிரியப்பா - சங்க இலக்கியங்கள் பல
C) கலிப்பா - கலித்தொகை
D) ஏதுமில்லை

66) அயோத்திதாசரால் இயற்றப்படாத நூல் எது?

A) புத்தரும் அவரது தம்மமும்
B) புத்தரது ஆதிவேதம்
C) இந்திரர் தேச சரித்திரம்
D) புத்தர் சரித்திரப்பா

67) எந்த இடத்தில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது?

A) கிண்டி B) அடையாறு C) தாம்பரம் D) மைலாப்பூர்

68) செயங்கொண்டார் பற்றிய வாக்கியங்களில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) முதலாம் குலோத்துங்கனின் அவையில் இவர் முதலமைச்சராகப் பணியாற்றியவர்
B) தீபங்குடியைச் சேர்ந்தவர்
C) இவர் இயற்றிய கலிங்கத்துப் பரணியே தமிழில் தோன்றிய முதல் பரணி ஆகும்
D) தவறானது ஏதுமில்லை

69) கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) கார்மேகக் கவிஞர் B) புலவர் குழந்தை C) நாமக்கல் கவிஞர் D) தேனரசன்

70) விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

A) இரண்டு B) நான்கு C) ஐந்து D) மூன்று

71) 'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி _____

A) இயல்பு B) தோன்றல் C) திரிதல் D) கெடுதல்

72) ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு எது?

A) பாலாறு B) மணிமுத்தாறு C) சிறுவாணி D) அமராவதி

73) சமத்துவ சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் அம்பேத்கர் உருவாக்கிய அமைப்பு எது?

A) சத்ய சோதக் சமாஜ்
B) சமாஜ் சமாத சங்கம்
C) சாதாரண சமாஜ்
D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**74)** மீரா இயற்றாத நூல் எது?

A) குக்கூ B) மூன்றும் ஆறும் C) சாபவிமோசனம் D) ஊசிகள்

**75)** அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 இல் தோற்றுவித்த அமைப்பின் பெயர்?

A) சுயமரியாதை இயக்கம் B) திராவிடர் கழகம்

C) திராவிட மகாஜன சங்கம் D) ஆதி திராவிடர் மகாஜன சபை

**76)** பின்வரும் எது புதுமைப்பித்தனின் சிறுகதை அல்ல?

A) கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் B) சாபவிமோசனம்

C) ஒருநாள் கழிந்தது D) சோற்றுக்கணக்கு

**77)** 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் யாது?

A) நீதிநூல் B) இராமாயணம்

C) இறையனார் களவியல் D) தொல்காப்பியம்

**78)** ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக, 1930 நவம்பரில் இங்கிலாந்தில் நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கருடன் கலந்துகொண்ட தமிழகத்தைச் சேர்ந்த நபர் யார்?

A) எம்.சி.ராஜா B) அயோத்திதாசப் பண்டிதர்

C) தந்தை சிவராஜ் D) இரட்டைமலை சீனிவாசன்

**79)** தூங்கி விழுந்தால் / பூமி உனக்குப் / படுக்கையாகிறது / விழித்து நடந்தால் / அதுவே உனக்குப் / பாதையாகிறது - என்னும் நம்பிக்கை வரிகளைத் தந்தவர் யார்?

A) புவியரசு B) மீரா C) மு. மேத்தா D) தமிழன்பன்

**80)** சேரர்கள் அடக்கிய கடற்கொள்ளையர்கள் யார்?

A) செவ்விந்தியர் B) கடம்பர் C) கரிபியர் D) ஸ்பானியர்

**81)** மு.மேத்தாவிற்கு சாகித்ய அகாதமி விருது பெற்றுத்தந்த நூல்?

A) புதிய உரைநடை B) வாழும் வள்ளுவம்

C) ஆகாயத்துக்கு அடுத்த வீடு D) வேரில் பழுத்த பலா

**82)** பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலின் பதிப்பாசிரியர் யார்?

A) செ.இராசு B) நா. வானமாமலை

C) அ. கௌரன் D) பக்தவத்சலபாரதி

**83)** ........................... சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

A) பயனிலை B) எழுவாய் C) செயப்படுபொருள் D) உருவகம்

**84)** புதுமைப் பித்தனின் இயற்பெயர்?

A) கல்யாணசுந்தரம் B) சொ.விருத்தாச்சலம்

C) இராஜகோபாலன் D) இராதாகிருஷ்ணன்

ETW ACADEMY

**85)** சீர் எத்தனை வகைப்படும்?

A) 2 B) 4 C) 6 D) 7

**86)** சேர நாட்டின் உள் நாட்டு வணிகத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது எது?

A) கரும்பு B) சோளம் C) நெல் D) கம்பு

**87)** கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமே .................. ஆகும்.

A) திண்டுக்கல் B) பழனி C) நீலகிரி D) கோவை

**88)** 1923ஆம் ஆண்டு, இலண்டனில் அம்பேத்கருக்கு எந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டம் அளிக்கப்பட்டது?

A) ரூபாய் பற்றிய பிரச்சனை

B) இந்தியாவில் சாதியின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

C) அனிஹிலேஷன் ஆஃப் கேஸ்ட்

D) பண்டைய இந்தியாவில் வணிகம்

**89)** "கள்ளக் கருத்துகளைக் கட்டோடு அறுத்தவருக்கு / உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பராபரமே!" - என்று பாடியவர் யார்?

A) உமறுப்புலவர் B) குணங்குடி மஸ்தான் சாகிபு

C) இராமலிங்க சுவாமிகள் D) பனி அகமது மரைக்காயர்

**90)** "வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி / மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்....." - என்னும் கவிதை வரிகள் இடம்பெற்ற நூல்?

A) கலிங்கத்துப்பரணி B) தகடூர் யாத்திரை C) மூதுரை D) புறநானூறு

**91)** "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் / நன்றே நினைமின் நமனில்லை நாணாமே" - என்று துவங்கும் பாடலை இயற்றியவர் யார்?

A) செயங்கொண்டார் B) சுந்தரர்

C) திருமூலர் D) மாணிக்கவாசகர்

**92)** அம்பேத்கர் தொடங்கிய கட்சியின் பெயர்?

A) இந்திய நல உரிமை சங்கம் B) சுதந்திரத் தொழிலாளர் கட்சி

C) ஒடுக்கப்பட்டோர் பாரதம் D) மூக்நாயக்

**93)** தகடூர் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) திருநெல்வேலி B) திருச்சி C) தர்மபுரி D) திருவள்ளூர்

**94)** "போந்தை வேம்பே ஆரென வரூஉம் / மாபெருந் தானையர் மலைந்த பூவும்" - எனச் சேரரை முன்வைக்கும் இலக்கண நூல் எது?

A) நன்னூல் B) இறையனார் களவியல்

C) தொல்காப்பியம் D) தண்டியலங்காரம்

**95)** சேரர்களின் நாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) கோடநாடு B) குடநாடு C) குட்டநாடு D) குடகுநாடு

**96)** பொருத்துக.

1. மட்பாண்டம் - அ) இயல்புப் புணர்ச்சி
2. மரவேர் - ஆ) திரிதல் விகாரம்
3. மணிமுடி - இ) தோன்றல் விகாரம்
4. கடைத்தெரு - ஈ) கெடுதல் விகாரம்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ B) 1-ஈ, 2-இ, 3-அ, 4-ஆ
C) 1-ஆ, 2-ஈ, 3-அ, 4-இ D) 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ

**97)** பின்வருவனவற்றுள் வல்லினம் மிகும் இடங்களைத் தேர்ந்தெடுக்க.

A) இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வருமிடம் B) நான்காம் வேற்றுமை உருபு
C) வினைத்தொகை D) உம்மைத்தொகை

**98)** எதை "ஆண்மையின் கூர்மை" என்கிறார் திருவள்ளுவர்?

A) பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை B) பகைவரின் உதவியை ஏற்றுக்கொள்ளுதல்
C) பகைவருக்கு துன்பம் வரும்போது உதவுதல் D) மேற்கண்ட அனைத்தும் பொருந்தி வந்தால்

**99)** நாக்பூரில், அம்பேத்கர் இலட்ச்சக்கணக்கான மக்களோடு புத்தசமயத்தில் இணைந்த நாள் எது?

A) 1956, அக்டோபர் 14 B) 1956, நவம்பர் 14 C) 1957, அக்டோபர் 14 D) 1957, நவம்பர் 14

**100)** இறையரசனின் இயற்பெயர் என்ன?

A) சே. சேசுராசா B) அருள் செல்லதுரை C) செல்வராஜ் D) கண்ணகன்

**101)** பின்வரும் வாக்கியங்களில் எது(வை) சரி?

1. ஒருவர் பிறப்பின் அடிப்படையில் பெறக்கூடிய குடியுரிமை இயற்கைக் குடியுரிமை
2. ஒருவரால் விண்ணப்பிக்கப்பட்டு பெறப்படும் குடியுரிமை இயல்புக் குடியுரிமை

A) 1 மட்டும் B) 1 & 2 C) 2 மட்டும் D) எதுவும் இல்லை

**102)** பின்வரும் வாக்கியங்களில் எவை சரி?

1. 1937இல் ‘Culture‘ என்னும் சொல்லுக்கு இணையாகப் ‘பண்பாடு‘ என்னும் தமிழ்ச் சொல்லை பயன்படுத்தியவர் ரசிகமனி டி.கே.சி
2. பண்பாட்டைப் பற்றி "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்“ என்று குறிப்பிடும் நூல் கலித்தொகை
3. பண்பாட்டைப் பற்றி “பண்புடையார்ப் பட்டுண்டு உலகு“ எனக் குறிப்பிடும் நூல் சிலப்பதிகாரம்

A) 1 & 2 B) 1 & 3 C) 2 & 3 D) 1, 2 & 3

**103)** தவறான இணை எது?

1. சுத்த பீடகம் - பௌத்த துறவிகளுக்கான சட்டதிட்டங்கள்
2. விநய பீடகம் - புத்தரின் தத்துவங்கள்
3. அபிதம்ம பீடகம் - புத்தரின் அறிவுரைகள்
4. ஆகம சித்தாந்தங்கள் - சமண நூல்கள்

A) 1, 2 & 4 B) 2, 3 & 4 C) 1, 2 & 3 D) அனைத்தும்

ETW ACADEMY

**104)** சரியான கூற்று(கள்) எது (வை)

1. இந்தியாவில் மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலம் சிக்கிம்
2. இந்தியாவில் மிக அதிக மக்கள்டர்த்தியைக் கொண்ட (1106 பேர்/ச.கி.மீ) மாநிலம் பீகார்
3. இந்தியாவில் மிகக் குறைந்த மக்கள் அடர்த்தியைக் கொண்ட மாநிலம் (17 பேர் / ச.கி.மீ) அருணச்சலபிரதேசம்

A) 1 & 2 மட்டும் B) 3 மட்டும் C) 2 & 3 மட்டும் D) 1, 2 & 3

**105)** உள்நாட்டு இடப்பெயர்வு பின்வரும் எதில் மாற்றத்தை ஏற்படுத்தாது?

A) நாட்டின் மக்கள் தொகையில் B) மக்கள் தொகை பரவல்
C) மக்கள் அடர்த்தி D) மக்கள் கலவை

**106)** தன்னுடைய பேரரசை பலப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் சாஹி (ராயல்) சாலையை சிந்து பள்ளத்தாக்கிலிருந்து மேற்கு வங்கத்தில் உள்ள சோனார் பள்ளத்தாக்கு வரை அமைத்தவர் யார்?

A) அக்பர் B) இல்துமிஷ்
C) ஷெர்ஷா சூரி D) இரண்டாம் சமுத்திரகுப்தர்

**107)** ரயில்வே மண்டலங்கள் மற்றும் அவற்றின் தலைமையிடங்கள் இணைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பொருந்தாதது எது?

A) வடக்கு இரயில்வே - புதுடெல்லி B) வடமேற்கு இரயில்வே - ஜெய்ப்பூர்
C) வடமத்திய இரயில்வே - அலகாபாத் D) வடகிழக்கு இரயில்வே - கௌகாத்தி

**108)** கிராமப்புறங்களில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, PURA என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) நரேந்திர மோடி B) அப்துல் கலாம் C) ரகுராம் ராஜன் D) மன்மோகன் சிங்

**109)** ஊரக வறுமைக்கான காரணங்கள் எவை?

1. நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை
2. பண்ணை சாராத தொழில்களில் வேலைவாய்ப்பின்மை
3. பொதுத்துறைகளில் அதிக முதலீடு
4. பணவீக்கம் & குறைந்த உற்பத்தித் திறன்

A) 1, 3 & 4 B) 1, 2 & 4 C) 1, 2 & 3 D) அனைத்தும்

**110)** வறுமை ஒழிப்புத் திட்டங்களும் அவை துவங்கப்பட்ட ஆண்டுகளும் இணைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தவறான இணை எது?

A) ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி (TRYSEM) - 1979
B) பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் சதக் யோஜனா (PMAGSY) - 2010
C) வேலைக்கு உணவுத்திட்டம் (FWP) - 1977
D) ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (RLEGP) - 1986

ETW ACADEMY

**111)** ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் (IRDP) தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1978 B) 1975 C) 1983 D) 1979

**112)** இந்தியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி நிலையம் எங்கு அமையவுள்ளது?

A) பாட்னா B) புவனேஸ்வர் C) மும்பை D) மேற்கு வங்கம்

**113)** செயற்கை வைரங்கள் தயாரிக்கப் பயன்படுவது?

A) நிலக்கரி B) கிராபைட் C) ஃபுல்லரின் D) கீட்டோன்

**114)** இந்தியாவில் சுதேச அரசுகளை முதன்முதலில் தொடங்கிவைத்தவர்கள் யார்?

A) இராஜபுத்திரர்கள் B) முகலாயர்கள் C) இராட்டிரகூடர்கள் D) குஷாணர்கள்

**115)** சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி எப்போது முடிவடைந்தது?

A) 30, ஏப்ரல் 1947 B) 15, ஆகஸ்ட் 1947 C) 26, ஜனவரி 1950 D) 30, ஜனவரி 1949

**116)** பின்வருவனவற்றுள், மொழிவாரி தனி மாநில கோரிக்கைகளை பரிசீலிக்க, ஜெவகர்லால் நேருவால் அமைக்கப்பட்ட குழு எது?

A) தர் குழு B) எஸ்.ஏ. டாங்கே குழு C) பசல் அலி குழு D) ஜே.வி.பி குழு

**117)** பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம் 1966 இன் படி உருவாக்கப்பட்ட மாநிலம் எது?

A) அரியானா B) அஸ்ஸாம் C) சிக்கிம் D) நாகாலாந்து

**118)** 1802-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தை உருவாக்கியவர் யார்?

A) ரிப்பன் பிரபு B) வெல்லெஸ்லி பிரபு

C) காரன் வாலிஸ் D) டல்ஹௌசி பிரபு

**119)** இந்திய அரசால் நிர்வகிக்கப்படும் இந்திய நிலக்கரி நிறுவனம் எதனை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது?

A) கொல்கத்தா B) தானே C) பூனே D) மும்பை

**120)** இரும்புத்தாது படிவையும், அதில் உள்ள இரும்பின் அளவையும் பொருத்துக:

(i) மேக்னடைட் - 1. 55%

(ii) ஹேமடைட் - 2. 48.2%

(iii) கோதைட் - 3. 72.4%

(iv) லைமனைட் - 4. 69.9%

(v) சிடரைட் - 5. 62.9%

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 4 | 5 | 1 | 2 | 3 |
| D) | 5 | 1 | 2 | 3 | 4 |

ETW ACADEMY

**121)** இந்தியாவின் மிகப் பழமையான எண்ணெய் வயல் எது?

A) திக்பாய் எண்ணெய் வயல் B) நாகர்காட்டியா எண்ணெய் வயல்

C) ருத்ரசாகர்-லாவா எண்ணெய் வயல் D) பேஸ்ஸைம் எண்ணெய் வயல்

**122)** உலகளவில் பருத்தி உற்பத்தில் இந்தியா வகிக்கும் இடம் என்ன?

A) முதலாவது B) மூன்றாவது C) ஆறாவது D) எட்டாவது

**123)** இந்தியாவின் மொத்த தாமிர உற்பத்தியில் 62 % பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

A) இராஜஸ்தான் B) ஆந்திரா C) உத்ரகாண்ட் D) ஜார்கண்ட்

**124)** நிலக்கரிகளின் வகைகளையும் அவை கொண்டுள்ள கரிம அளவுகளையும் பொருத்துக:

(i) ஆந்தரசைட் - 1. 80 முதல் 90 சதவீதம்.

(ii) பிட்டுமினஸ் - 2. 60 முதல் 80 சதவீதம்.

(iii) பழுப்பு நிலக்கரி - 3. 40 முதல் 60 சதவீதம்.

(iv) மரக்கரி - 4. 40 சதவீதத்திற்கும் குறைவு

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**125)** சணல் பொருட்களின் உற்பத்தியில் எந்த நாட்டிற்கு அடுத்து, இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது?

A) வங்கதேசம் B) சீனா C) மியான்மர் D) பாகிஸ்தான்

**126)** ரஷ்யாவின் தொழில்நுட்ப உதவியுடன் நிறுவப்பட்ட இந்துஸ்தான் எஃகு நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

A) பிலாய் - சத்தீஸ்கர் B) ரூர்கேலா - ஒடிசா

C) துர்காப்பூர் - மேற்கு வங்கம் D) சேலம் - தமிழ்நாடு

**127)** குடியுரிமை இழப்பு வழிமுறைகள் பற்றிக் கூறும் இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகள் எவை?

A) 5 முதல் 11 வரை B) 5 முதல் 9 வரை C) 4 முதல் 12 வரை D) 8 முதல் 12 வரை

**128)** மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றினால், ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்வது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) குடியுரிமை துறப்பு B) குடியுரிமை முடிவுக்கு வருதல்

C) குடியுரிமை மறுத்தல் D) இவையனைத்தும்

**129)** பின்வரும் செய்திகளில் எவை சரி?

1. புறநானூற்றின் வழியாக அறியப்படும் ஆடை வகைகள் 10

2. புறநானூற்றின் வழியாக 38 வகை அணிகலன்கள் இருந்ததை நாம் அறிகிறோம்.

3. புறநானூற்றின் வழியாக 67 வகை உணவுகள் இருந்ததையும் நாம் அறிகிறோம்

A) 1 & 2 B) 2 & 3 C) 1, 2 & 3 D) 1 & 3

ETW ACADEMY

**130)** தமிழர் திருமண முறை களைப்பற்றி அறிந்துகொள்ள முடியும் தனி இலக்கிய நூல் எது?

A) அகநானூறு B) புறநானூறு C) குறுந்தொகை D) கலித்தொகை

**131)** தவறான இணை எது?

1. பொதுமை நோக்கம் - புறநானூறு
2. அன்பின் சிறப்பு - நற்றிணை
3. விருந்தோம்பும் பண்பு - ஐங்குறுநூறு
4. மார்கழி நோன்பு - கலித்தொகை

A) 1ம் 2ம் மட்டும் B) 2ம் 3ம் மட்டும் C) 3ம் 4ம் மட்டும் D) அனைத்தும்

**132)** எது சரி?

1. யூனியன் பிரதேசங்களில் அதிக மக்களடர்த்தியைக் கொண்டது புதுடில்லி
2. யூனியன் பிரதேசங்களில் குறைந்த மக்களடர்த்தியைக் கொண்டது சண்டிகர் ==> அந்தமான் நிக்கோபார்

A) 2 மட்டும் B) 1 மட்டும் C) 1 & 2 D) ஏதுமில்லை

**133)** எது சரி?

1. இந்தியாவில் 62.17 சதவீத நகர்ப்புற மக்கள் தொகையுடன் மிகுந்த நகர்மயமாக்கப்பட்ட பகுதியாக உள்ள மாநிலம் கோவா
2. இந்தியாவில் 10.04 சதவீத நகர்ப்புற மக்கள் தொகையுடன் குறைந்த நகர்மயமாக்கப்பட்ட பகுதியாக உள்ள மாநிலம் அருணாச்சல பிரதேசம்
3. இந்தியாவின் பெரிய மாநிலங்களுள் மிகுந்த நகரமயமாக்கப்பட்ட (48.4%) மாநிலமாக உள்ளது தமிழ்நாடு

A) 1 & 3 B) 1 & 2 C) 2 & 3 D) 1, 2 & 3

**134)** இந்தியாவின் மூன்று "மெகா நகரங்களில்" சேராதது எது?

A) மும்பை (18.4 மில்லியன்) B) புதுடெல்லி (16.3 மில்லியன்)

C) கொல்கத்தா (14.1 மில்லியன்) D) சென்னை (12.4 மில்லியன்)

**135)** பின்வரும் செய்திகளைக் கொண்டு, குறிப்பிடப்பட்டுள்ள சாலையை அடையாளம் காண்க:

1. இது 5,846 கி.மீ நீளத்தையும் 4 முதல் 6 வழிகளைக் கொண்டதாகவும் உள்ளது.
2. இது வடக்கு தெற்காக இந்தியாவின் நான்கு பெரு நகரங்களான புதுடெல்லி - கொல்கத்தா - சென்னை - மும்பை - புதுடெல்லி ஆகியவைகளை இணைக்கிறது.
3. இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

A) தங்க நாற்கரச் சாலை B) சேது பாரத சாலை

C) தலைநகர இணைப்பு சாலை D) மேற்கண்ட எதுவுமில்லை

**136)** நடைமுறையிலுள்ள ஊதிய விகிதத்தில், தனி நபர் வேலை செய்ய விருப்பப்பட்டும் வேலை கிடைக்கப் பெறாத நிலைக்கு என்ன பெயர்?

A) பகுதி வேலைநிலை B) வேலையின்மை

C) முழு வேலைநிலை D) பருவகால வேலையின்மை

ETW ACADEMY

**137)** ஊரக வேலையின்மைக்கான காரணங்கள் எவை?

1. திறன்மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இன்மை
2. வேளாண்மை பருவகாலம் சார்ந்தது
3. துணை தொழில்களின்மை
4. வேளாண்மையை இயந்திரமயமாக்கல்
5. மூலதன செறிவு தொழில்நுட்பம்
6. கல்விமுறையில் உள்ள குறைபாடுகள்

A) 1, 3, 4, 5 & 6 மட்டும் B) 1, 2, 4, 5 & 6 மட்டும்
C) 2, 4, 5 & 6 மட்டும் D) மேற்கண்ட அனைத்தும்

**138)** கிராமத் தொழிற்சாலைகளுக்கு எடுத்துக்காட்டு எது / எவை?

1. சர்க்கரை மற்றும் வெல்லம் தயார்த்தல்
2. பிரம்பு மற்றும் மூங்கில் கூடை செய்தல்
3. காலணி தயாரித்தல்
4. மட்பாண்டங்கள் மற்றும் தோல் பதனிடுதல்

A) 1, 3 & 4 மட்டும் B) 1, 2 & 3 மட்டும்
C) 2, 3 & 4 மட்டும் D) மேற்கண்ட அனைத்தும்

**139)** தமிழ்நாட்டின், மாநில உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

A) அ.ராமசாமி B) பிரபா. கல்யாணி
C) சுப வீரபாண்டியன் D) திண்டுக்கல் ஐ.லியோனி

**140)** கார்பனின் புறவேற்றுமை வடிவங்களில் சேராதது?

A) படிக வடிவம் உடையவை B) படிக வடிவம் அற்றவை
C) பாலிகோணல் D) ஃபுல்லரின்

**141)** சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பின்போது சர்தார் வல்லபாய் பட்டேலின் செயலாளராக பொறுப்பேற்று ஒருங்கிணைப்பிற்கான களப்பணிகளை மேற்கொண்டவர் யார்?

A) வி.பி. சிங் B) வி.பி. மேனன் C) வி.எச். மிஸ்ரா D) வி.எச். சிங்

**142)** சுதந்திரத்திற்கு பின்பு இந்து மகாராஜா ஹரிசிங் ஆட்சி செய்த _____ மட்டுமே சுதேச அரசாக இருந்தது.

A) பீகார் B) பீரார் C) காஷ்மீர் D) ராஜபுதனம்

**143)** மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்ட முதல் மாநிலம் எது?

A) பீஹார் B) ஒடிசா C) தமிழ்நாடு D) ஜார்கண்ட்

**144)** பிராமணர் அல்லாதோர் இயக்கம் தொடங்கப்பட்டதன் காரணம் என்ன?

A) சாதிப்பிரிவினை B) மொழிவாரி தேசியவாதம்
C) வர்க்க போராட்டம் D) இவையனைத்தும்

ETW ACADEMY

**145)** இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம் 1897 ஆம் ஆண்டு எங்கு நிறுவப்பட்டது?

A) சிம்லா B) குந்தா C) டார்ஜிலிங் D) மூனார்

**146)** உலகிலேயே ஒரு பகுதியில் அதிக காற்றாலைகளைக் கொண்ட பெரிய காற்றாலை பண்ணை எது?

A) விதர்பா - விகாஸ்பகுதி B) காக்கிநாடா - செலுக்கஸ்பகுதி
C) விழிஞம் - திருவனந்தஔரம் பகுதி D) முப்பந்தல் - பெருங்குடிப்பகுதி

**147)** சரியான கூற்று எது?

1. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள் ஆகியோர் குடியேறியவர் எனப்படுகிறார்.
2. ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.
3. ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுகிறார்.

A) 1 மட்டும் B) 2ம் 3ம் மட்டும்
C) 1ம் 3ம் மட்டும் D) அனைத்தும்

**148)** வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்), இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை எந்நாளில் கொண்டாடப்படுகிறது?

A) ஜனவரி 9 B) ஜனவரி 30 C) அக்டோபர் 2 D) ஜூலை 1

**149)** ‘இலக்கியங்கள், காலங்காட்டும் கண்ணாடிகளாக விளங்க, நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாய வளர்ச்சியைக்காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன‘ என்று கூறியவர் யார்?

A) திருக்குறளார் வீ.முனிசாமி B) பேராசிரியர். ச. வைத்தியலிங்கம்
C) பேராசிரியர் க. அன்பழகன் D) பேராசிரியர் சு. சக்திவேல்

**150)** பின்வரும் வாக்கியங்களில் சரியானது எது?

1. கதைப்பாடலுக்குத் தமிழில் வழங்கப்பட்ட பெயர் அம்மானை ஆகும்
2. அம்மானை எனும் சொல் முதன்முதலாகக் கையாளப்பட்ட நூல் சிலப்பதிகாரம் ஆகும்

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 & 2 D) ஏதுமில்லை

**151)** பின்வரும் வாக்கியங்களில் சரியானது எது?

1. ‘புராணக் கதைகள், தங்களை உருவாக்கிய மக்களைப் பற்றியும் பயன்படுத்துவோரைப் பற்றியும் கூறுகிறது‘ என்றவர் மாக்ஸ் முல்லர்
2. ‘ஒவ்வொரு புராணமும் ஏதோ ஓர் உண்மையைக் கூற விழைகிறது என்று குறிப்பிடுபவர் ஈ.பி. டெய்லர்

A) இரண்டும் தவறு B) இரண்டும் சரி C) 2 மட்டும் D) 1 மட்டும்

**152)** 24 மணி நேரமும் செயல்பட்டு 205 கி.மீ தொலைவிற்கு போக்குவரத்து வசதியை அளிக்கக்கூடிய இந்தியாவின் முதல் தேசிய நீர்வழி போக்குவரத்து எது?

A) தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண் 1 B) தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண் 2
C) தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண் 3 D) தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண் 4

153) இந்தியாவில் நான்கு முக்கிய கப்பல் கட்டும் தளங்கள் உள்ளன. அவற்றில் பொருந்தாத இணை எது?

A) இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் - மங்களூரு

B) கார்டன் ரீச் கப்பல் கட்டும் தொழிற்சாலை - கொல்கத்தா

C) மசாகான் கப்பல் கட்டும் தொழிற்சாலை - மும்பை

D) கொச்சி கப்பல் கட்டும் தளம் - கொச்சி

154) பொதுத்துறை நிறுவனமான பவன் ஹான்ஸ் வானுலங்கு ஊர்தி நிறுவனத்தின் தலைமையிடம் எது?

A) செகந்தராபாத் B) மும்பை C) கௌகாத்தி D) புதுடெல்லி

155) வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு எடுத்துக்காட்டு அல்லாதது எது?

A) தோல் பதனிடும் ஆலை

B) ஜவுளி தொழிற்சாலை

C) சர்க்கரை மற்றும் காகித ஆலைகள்

D) தாவர எண்ணெய் ஆலை, தேயிலை மற்றும் காபி தொழிற்சாலைகள்.

156) வட்டார ஊரக வங்கிகள் (Regional Rural Banks) செயல்படுத்தப்பட்ட ஆண்டு என்ன?

A) 1986 B) 1971 C) 1981 D) 1975

157) இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் குறு கடன் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையாக இருந்தது என திரிபாதி அறிக்கை 2014 கூறுகிறது?

A) 100 B) 150 C) 200 D) 250

158) SHGs வங்கி இணைப்புத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்ட மாநிலம் எது?

A) ஆந்திரா B) தமிழ்நாடு

C) கேரளா & கர்நாடகா D) மேற்கண்ட அனைத்தும்

159) ஆக்சிஜனேற்ற வினைகளில் வினையூக்கியாகவும் ராக்கெட்டுகளில் எரிபொருளாகவும் பயன்படுவது?

A) அம்மோனியம் நைட்ரேட் B) நைட்ரிக் ஆக்சைடு

C) நைட்ரஸ் ஆக்சைடு D) நட்ரஜன் டை ஆக்சைடு

160) பின்வரும் எவை தாவரங்களுக்கான நுண் ஊட்டப்பொருட்கள் ஆகும்?

A) மாங்கனீசு, தாமிரம், மாலிப்டினம் B) நைட்ரஜன், பாஸ்பரஸ்

C) பொட்டாசியம், கால்சியம் D) மெக்னீசியம் & கந்தகம்

161) பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. நீதிக்கட்சியானது பெரியார் ஈ.வே.ராமசாமி தலைமையில் சுய மரியாதை இயக்கமாக மாறியது.

2. இந்த இயக்கம் தமிழ் மக்களின் பண்பாடு மற்றும் அரசியல் வாழ்வில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

3. தென்னிந்தியாவில் தமிழ் தேசியவாதம் தேய்வதற்கு இவ்வியக்கம் காரணமானது.

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி

C) 3 மட்டும் தவறு D) அனைத்தும் சரி

**162)** பெரியார், 'திராவிட நாடு' மாநாட்டினை நடத்தி "திராவிட நாடு" கோரிக்கையை முன்வைத்த ஆண்டு என்ன?

A) 1937 B) 1938 C) 1939 D) 1940

**163)** நெசவாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் நெசவுத்துறையில் உலகளவில் இந்தியாவின் இடம் என்ன?

A) முதலிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) ஆறாமிடம்

**164)** இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி தொழிற்சாலை முதன் முதலில் 1830 ல் தமிழ்நாட்டில் எங்கு அமைக்கப்பட்டது?

A) பரங்கிப்பேட்டை B) லால்குடி C) துவாக்குடி D) பொன்மலை

**165)** “மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்“ என்று கூறும் வேதம் எது?

A) யஜூர் B) அதர்வண C) சாமம் D) ரிக்

**166)** எண்ணற்ற அதிசயங்களைத் தன்னகத்தே கொண்டது இந்தியா என்று கூறும் புகழ்மிக்க வரலாற்று அறிஞர் யார்?

A) இராமச்சந்திர குஹா B) ராகுல சாங்கிருத்தியாயன்
C) எ.எல். பாஷம் D) ஹெரோடோட்டஸ்

**167)** இந்தியாவின் தேசிய நதியாகக் கங்கை அறிவிக்கப்பட்ட ஆண்டு எது?

A) 2005 B) 2006 C) 2007 D) 2008

**168)** தவறான இணை எது?

A) பஞ்சாப் - கோதுமை B) மேற்கு வங்காளம் - நெல்
C) கேரளா - வாசனைப் பொருட்கள் D) அஸ்ஸாம் - காபி

**169)** இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பு இரண்டு பிரிவுகளைக்கொண்டது. அவை யாவை?

A) INSAT & IRS B) PSLV & INSAT C) IRS & GSAT D) GSAT & PSLV

**170)** முத்ரா வங்கியின் நோக்கம் என்ன?

A) குறுங்கடன் வாங்குபவரையும், பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறுங்கடன் வழங்குவதில் நிலைத்த தன்மையை ஏற்படுத்தல்.

B) சிறு தொழில் புரிபவர்கள், சில்லறை வியாபாரிகள், சுயஉதவிக்குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு கடன் வழங்கும் சிறு நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்.

C) அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களையும் பதிவு செய்தல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை தரம் நிர்ணயம் செய்தல் மற்றும் முறையான ஒப்புதல் வழங்குதல்.

D) மேற்கண்ட அனைத்தும்

**171)** பொருளின் அணு அணுகுமுறையை விளக்கியவர்?

A) ஐன்ஸ்டீன் B) மோஸ்லே C) ரூதர்போர்டு D) மேரி கியூரி

ETW ACADEMY

**172)** பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. 1956-ல் அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இராஜாஜியும் அவரது ஆதரவாளர்களும் "தட்சிண பிரதேசம்" குறித்து பேசினர்.

2. அப்போதைய தமிழக முதலமைச்சர் காமராசரும் அதை ஆதரித்தார்

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

**173)** அஸ்ஸாம் நேபாள எல்லையில் வாழும் இந்திய இனம் எது?

A) திராவிட இனம் B) இந்தோ - ஆரியர்

C) பெர்சிய இனம் D) மங்கோலிய இனம்

**174)** தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரில் சேராதோர்?

A) தோடர்கள் B) இருளர்கள் C) குறும்பர்கள் D) செண்டினல்ஸ்

**175)** சிந்து நதி பாயும் பகுதி என்பதால், இந்தியத் துணைகண்டத்தை 'சிந்து' என்று முதலில் அழைத்தவர்கள் யார்?

A) ஆங்கிலேயர்கள் B) ரோமானியர்கள்

C) கிரேக்கத்தினர் D) பாபிலோனியர்கள்

**176)** A:B = 6:9 மற்றும் B:C = 7.10 எனில் A:B:C காண்க

A) 32:63:90 B) 63:42:90 C) 14:21:30 D) 30:14:21

**177)** A:B = 1:2, B:C = 2:3, C:D = 1.5 எனில் A:B:C:D காண்க

A) 1:2:3:15 B) 3:2:1:15 C) 15:1:2:3 D) 30:150:20:10

**178)** 1/4 A = 1/5 B = 1/6 C எனில் A:B:C காண்க

A) 2:3:4 B) 3:4:5 C) 4:5:6 D) 5:6:7

**179)** A/7 = B/4 எனில் (A+7) : (B+4) காண்க

A) 4:7 B) 2:4 C) 2:7 D) 7:4

**180)** A - யின் 80% ஆனது B - யின் 5/4 க்கு சமம் எனில் A:B யாது?

A) 25:16 B) 16:25 C) 4:5 D) 5:4

**181)** 7:15 என்ற விகிதத்துடன் எந்த எண்ணைக் கூட்ட அந்த விகிதம் 7:11 ஆக மாறும்?

A) 5 B) 10 C) 7 D) 14

**182)** இரு எண்களின் விகிதம் 6:7. அவற்றின் கூடுதல் 260 எனில் அவற்றில் பெரிய எண்?

A) 120 B) 140 C) 160 D) 180

**183)** 6 மீட்டர் நீளமுள்ள ஒரு கம்பத்தின் நிழலின் நீளம் 15 மீட்டர் எனில் 25 மீட்டர் நிழல் கொண்ட கம்பத்தின் நீளம் என்ன?

A) 8 மீட்டர் B) 10 மீட்டர் C) 12 மீட்டர் D) 15 மீட்டர்

**184)** இரு எண்களின் விகிதம் 3:5. இரு எண்களிலும் 10-ஐக் கூட்டினால் அவைகளின் விகிதம் 4:5 ஆகும் எனில் எவ்விரு எண்கள்?

A) 5, 8 B) 6, 10 C) 7, 12 D) 12, 14

ETW ACADEMY

**185)** இரு எண்களின் விகிதம் 3:4. அவ்விரு எண்களின் பெருக்குத் தொகை 300 எனில் அவற்றில் சிறிய எண்?

A) 20 B) 25 C) 15 D) 10

**186)** குமார் மற்றும் ரமேஷ் ஆகிய இருவரின் வருமானத்தின் விகிதம் 3:2. அவர்களின் செலவுகளின் விகிதம் 5:3. ஒவ்வொருவரும் ரூபாய் 2000 சேமிக்கின்றனர் எனில் குமாரின் வருமானம் எவ்வளவு?

A) 12000 B) 14000 C) 10000 D) 8000

**187)** A, B, C ஆகியோரின் சம்பளங்கள் 3:4:5 என்ற விகிதத்தில் உள்ளன. அவர்களுக்கு ஊதிய உயர்வு முறையே 10%, 20% & 30% வழங்கப்பட்ட பிறகு அவர்களுடைய புதிய சம்பளங்களின் விகிதம் என்ன?

A) 33:48:65 B) 48:33:65 C) 65:48:33 D) 33:65:48

**188)** ஒரு பையில் 50 பைசா, 25 பைசா, 10 பைசா நாணயங்கள் முறையே 5:9:4 என்ற விகிதத்தில் உள்ளன. அவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் 309 எனில் ஒவ்வொரு நாணயங்களின் எண்ணிக்கை என்ன?

A) 300, 540, 240 B) 350, 520, 300 C) 540, 300, 240 D) 340, 540, 240

**189)** ஜெயா மற்றும் சீலா ஆகிய இருவரின் சம்பளம் 2:3 என்ற விகிதத்தில் உள்ளது. இவர்களின் சம்பளங்களை தலா 4000 ரூபாய் அதிகரித்தால் சீலாவின் புதிய சம்பளம் எவ்வளவு?

A) 16750 B) 15350 C) 20350 D) 18350

**190)** 20 லிட்டர் கலவையில் 20% ஆல்கஹாலும் மீதம் தண்ணீரும் உள்ளது. இதில் 4 லிட்டர் தண்ணீர் சேர்த்தால் கிடைக்கும் புதிய கலவையில் உள்ள ஆல்கஹாலின் சதவீதம் எவ்வளவு?

A) 15 % B) 18 1/3 % C) 16 2/3% D) 18 3/2%

**191)** 4 ஆண்கள், 5 பெண்கள், 6 குழந்தைகளுக்கு ரூபாய் 425 ஐ 9:8:4 என்ற விகிதத்தில் பிரித்துக்கொடுத்தால், அதில் பெண்கள் பெறும் பங்கு எவ்வளவு?

A) 160 B) 150 C) 170 D) 190

**192)** ஒரு உலோகக் கலவையில் செம்பும் துத்தநாகமும் 7:9 என்ற விகிதத்தில் உள்ளது எனில் 28க்க் செம்பிற்கு எவ்வளவு துத்தநாகம் உருக்க வேண்டும்?

A) 63 கிலோ B) 60 கிலோ C) 45 கிலோ D) 36 கிலோ

**193)** ஒரு உருளையின் ஆரம் மற்றும் உயரங்களின் விகிதங்கள் முறையே 2:3 மற்றும் 5:6 எனில் அவற்றின் கன அளவுகளின் விகிதம் என்ன?

A) 10:27 B) 20:50 C) 50:30 D) 30:50

**194)** இரு எண்கள் 3:4 என்ற விகிதத்தில் உள்ளது. அவற்றின் மீசிம 240 எனில் முதல் எண் என்ன?

A) 54 B) 64 C) 60 D) 50

**195)** மூன்று பேருந்துகளின் வேகங்கள் 2:3:4 என்ற விகிதத்தில் இருந்தால், ஒரே அளவு தூரத்தைக் கடக்க அவை எடுத்துக்கொள்ளும் நேரங்களின் விகிதம்?

A) 12:10:8 B) 16:12:8 C) 12:8:4 D) 6:4:3

**196)** மூன்று மாணவர்களின் சராசரி வயது 25. அவர்களின் வயதுகளின் விகிதங்கள் 4:5:6 எனில் அம்மாணவர்களில் வயதில் மூத்தவரின் வயது என்ன?

A) 30 B) 28 C) 35 D) 25

**197)** ஒரு கல்லூரியில் உள்ள மாணவ மாணவிகளின் விகிதம் 5:6. அக்கல்லூரியில் உள்ள மொத்த மாணவர்கள் 160 எனில் அக்கல்லூற்றியில் உள்ள மொத்த மாணவ மாணவிகள் எத்தனை பேர்?

A) 382 B) 352 C) 402 D) 386

**198)** கூட்டு விகிதம் காண்க: (2:5), (3:9), (10:4)

A) 3:1 B) 3:2 C) 2:3 D) 1:3

**199)** A, 6, 12 ஆகியவை ஒரு தொடர் விகிதத்தில் இருந்தால் 'A'-யின் மதிப்பு?

A) 1 B) 2 C) 3 D) 4

**200)** A:B = 6:3 எனில் (8A+5B) : (5A+8B) =?

A) 6:7 B) 7:6 C) 3:8 D) 8:3

***

© ETW Academy

ETW ACADEMY